[1978 செப்டம்பர் 8

திரு. எஸ். ஜே. இராமசாமி: இந்தச் சிலைகளை எல்லாம் பாதுகாத்து மியூசியத்தில் வைக்க அரசாங்கம் ஏற்பாடு செய்யுமா? அதை மியூசியத்தில் வைக்காமல் ஏன் அங்கேயே வைத்திருக்கிறார்கள்?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: இதை அரசுடைமையாக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன,

வடக்கனந்தல் பேரூராட்சியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி

*வினா எண். 88—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியம்: மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வடக்கனந்தல் பேரூராட்சியில் கோமுகி ஆற்றிலிருந்து குடிநீர் வழங்குவதற்கென மேல்நிலை தொட்டி ஒன்று கட்ட அரசு நடவடிக்கை எடுத்துள்ளதா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

உள்ளாட்சி மன்றத் தேர்தல்களில் வாக்காளர் வயது.

வினா எண். 89—திரு. நா. பழனிவேல்
திரு. என். கிட்டப்பா: } மாண்புமிகு உள்ளாட்சித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:—

வரும் நகராட்சி, ஊராட்சித் தேர்தல்களில் கேரளாவில் இருப்பதைப் போல் வாக்களிக்கும் வயது வரம்பை 21-லிருந்து 18 ஆகக் குறைக்கும் திட்டம் உண்டா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இல்லை.

திரு, என். பழனிவேல்: வரும் நகராட்சித் தேர்தல்களிலும், ஊராட்சித் தேர்தல்களிலும் வாக்காளர்களின் வயது வரம்பை 21-ல் இருந்து 18 ஆக கேரளத்திலும் மேற்கு வங்கத்திலும் குறைத்திருப்பது போல் குறைக்க அரசு முன்வருமா? குறிப்பாக 18 வயதில் தாய்மார்கள் எல்லாம் இரண்டு மூன்று குழந்தைகளுக்குத் தாயாகிவிட்டாலும் அவர்கள் வாக்களிக்க உரிமை இல்லாமல் இருக்கிறது. ஆகவே, உடனடியாக வரும் நகராட்சி, ஊராட்சித் தேர்தலுக்கு இந்த வயது வரம்பை 21-ல் இருந்து 18 ஆகக் குறைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

1978 செப்டம்பர் 8]

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: 18 வயதில் தாய்மார்கள் இரண்டு மூன்று குழந்தைகளுக்குத் தாயாவதைத் தடுக்க ஒன்றும் செய்ய முடியாது. கேரளத்திலும், மேற்கு வங்கத்திலும் குறைத்திருப்பதாகச் சொன்னூர்கள். தமிழ்நாட்டில் குறைக்க உத்தேசம் இல்லை.

திரு, என். கிட்டப்பா: கேரளத்திலும், மேற்கு வங்கத்திலும் 18 வயது இருப்பவர்களுக்கு வாக்குரிமை அளிக்கப்பட்டிருக்கிறது அது இங்கு இல்லை என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டார்கள். இங்கு அதைக் கொண்டு வர முடியாததற்கான காரணத்தை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவிப்பார்களா? இனியேனும் புனராலோசனை செய்து 18 வயது திட்டத்தைச் செயல்படுத்த அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: நகராட்சி, ஊராட்சி வாக்காளர் பட்டியல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டது. 1-1-1978-ல் 21வயது அடைந்தவர்கள் வாக்காளர்களாகச் சேர்க்கப்பட்டிருக்கிறார்கள். அதை மீண்டும் மாற்றியமைக்க இப்போது இயலாது.

திரு. யா. சை. மு. யூசுப்: தமிழர்கள் உலகத்திலேயே அதி புத்திசாலிகளாக விளங்கிக் கொண்டிருக்கிறார்கள். மேற்கு வங்கம் கேரளம் ஆகிய மாநிலங்களில் 18 வயது என்று குறைத்திருக்கும் போது தமிழர்களின் புத்திசாலித்தனத்தை மனதில் வைத்து 21 வயதை 18 ஆகக் குறைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: இப்போது உத்தேசம் இல்லை:

திரு. மு. அம்பிகாபதி: 18 வயது அடைந்த இளைஞர்களுக்கு வாக்குரிமை கொடுக்க அரசு பயப்படுகிற காரணம் என்ன என்பதை அமைச்சர் அவர்கள் விளக்குவார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: வாக்காளர் பட்டியல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டது. ஆகக் கூடிய செலவைப் பொறுத்துத்தான் பயம்.

திரு. என், கிட்டப்பா: மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நடைபெற இருக்கிற தேர்தல்களுக்கு வாக்காளர் பட்டியல் ஏற்கனவே தயாரிக்கப்பட்டு விட்டதால் தற்போது அதை மாற்ற இயலாது என்று சொன்னூர்கள். அடுத்து வரும் ஸ்தல ஸ்தாபனத் தேர்தல்களிலாவது அந்த முறையைக் கையாண்டு 18 வயது திட்டத்தை மேற்கொள்ள அரசு ஆவன செய்ய முன்வருமா?

[1978 செப்டம்பர் 9

[முற்பகல் 9.30]

மாண்புமிகு திரு. கா, காளிமுத்து: தலைவர் அவர்களே, சட்டமன்ற, நாடாளுமன்றத் தேர்தல்களிலே வாக்காளர்களுக்கான வயது 21 என்று தான் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது, அதிலே மாறுதல் ஏற்பட்டால் இதிலே மாறுதல் ஏற்படுத்துவதைப்பற்றிச் சிந்திக்கலாம்.

திரு. பி. ஈஸ்வரமூர்த்தி என்கிற சொரணம்: தலைவர் அவர்களே, ஏற்கனவே வாக்காளர் பட்டியல் தயாரிக்கப்பட்டு விட்டதால் இப்போது மாற்ற முடியாது என்று சொன்னார்கள். இரண்டாவதாக அவர்கள் சொன்னபோது சட்டமன்ற நாடாளுமன்றத் தேர்தல்களுக்கு இப்போது 21 என்று இருப்பதால் இதை மாற்ற சாத்தியம் இல்லை என்று சொன்னார்கள். சட்டமன்ற பாராளுமன்றத் தேர்தலுக்கு 21 வயது என்று இருந்தபோதுதான் கேரளத்திலேயும் மேற்கு வங்கத்திலேயும் இந்த மாறுதல் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இப்போது இல்லாவிட்டாலும் அடுத்து வரும் தேர்தலின் போதாவது அதுமாதிரிக் கொண்டு வருவதற்கு அரசு முன் வருமா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, இது ஒரு கொள்கைப் பிரச்சினை.

திரு. என். பழனிவேல்: தலைவர் அவர்களே, 21 வயதை 18 வயதாகக் குறைக்க வேண்டுமென்று கோரி சமீபத்திலே சோஷலிஸ்ட் வாலிபர் முன்னணியினர் அரசுக்கு மனுக் கொடுத்தார்களா? அப்படியென்றால அவர்களுக்கு என்ன பதில் கொடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து: அப்படி எந்த மனுவும் இங்கே வரவில்லை.

திரு. மு. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, தேர்தல்களில் அடிக்கடி ஆள் மாறாட்டம் செய்து கள்ள ஓட்டுப் போடக்கூடிய பழக்கவழக்கத்தைத் தடுப்பதற்காக வாக்காளர்களின் புகைப் படத்துடன் கூடிய அடையாள அட்டைகளை வழங்குவதற்கு அரசுக்கு உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு கா. காளிமுத்து; இல்லை.

திரு வி. கே. கோதண்டராமன்: தலைவர் அவர்களே, ஜன நாயக வாலிபர்கள் முன்னணியின் சார்பில் அப்படி ஒன்றும் வர வில்லை என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், சென்ற மாதத்திலே கன்னியாகுமரி, கோவையிலிருந்து அவர்கள் சைக்கிள் ஜாதாவாக வந்து அந்த மகஜர் கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் வரவில்லை என்று அவர்கள் சொல்வது சரியில்லை என்பதை அமைச்சர் அவர்கள் உணர்வார்களா? ஜனநாயகம் என்று நாம்

1978 செப்டம்பர் 8]

பேசுகிறோம். ஆனால் உண்மையான ஜனநாயகம் என்ற அடிப்படையிலே தேர்தல் நடத்துவது என்றால் 50 சதவீதத்திற்கும் மேலான ஓட்டுகளை வாங்கி ஜெயித்து வருவது தான் பரிபூரண ஜனநாயகம் ஆகும், அந்த அடிப்படையிலே விகிதாச்சார அடிப்படையில் தேர்தல்களை நடத்த இந்த அமைச்சரவை முன்வருமா? எங்களுக்கு அதிகாரம் இல்லை என்று சொன்னாலும்கூட மத்திய சர்க்காரையாவது வலியுறுத்துவார்களா?

மாண்புமிகு திரு. கா. காளிமுத்து: தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோதண்டராமன் அவர்களின் சிறு சொற்பொழிவில் உள்ள கருத்துக்களை அரசு பரிசீலித்து நடவடிக்கை எடுக்கும்.

திரு ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் பதில் சொன்னபோது வாலிபர்கள் சைக்கிள் ஜாதாவாக வந்து கொடுக்கவில்லை என்று சொன்னார்கள், அது சரியல்ல, அவர்கள் சார்பாக நிதியமைச்சர் அவர்கள் அதைப் பெற்றுக்கொண்டார்கள், அப்போது நானும் இருந்தேன் அது இந்த அமைச்சருக்குச் சம்பந்தம் உடையது என்றால் நிதியமைச்சர் அவர்கள் அதை அனுப்பவில்லையா? என்ன சமாச்சாரம் என்று அதை ஸ்ட்ரயிட்டன் அவுட் பண்ணவேண்டுமென்று நான் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களை தங்கள் மூலமாகக் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. கி. மனோகரன்: தலைவர் அவர்களே, கேட்கப்பட்ட கேள்விக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் சொன்ன பதில் சரியானது. அவருக்கு அந்தத் தகவல் இல்லை, நண்பர் உமாநாத் அவர்கள் அந்த சோஷலிஸ்ட் வாலிப நண்பர்களை என்னிடம் அழைத்து வந்தது உண்மை. அவர்கள் கோரிக்கைகளை என்னிடம் தந்தார்கள் என்பதும் உண்மை. அதைப் பரிசீலனைக்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் அனுப்பி வைத்திருக்கிறேன் என்பதும் உண்மை.

கைத்தறித் தொழிலாளர் பற்றிய ஆய்வுக்குழு

*வினா எண். 90—[திரு. ஆ. நடராசன், திரு. கு. ரமணி திரு. வீ. கே. கோதண்டராமன், திரு. மு. அம்பிகாபதி திரு. என். கிட்டப்பா]: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

அ) திரு. ராஜா சுப்பிரமணியம் தலைமையில் அமைக்கப்பட்ட கைத்தறி நெசவாளர் பாதுகாப்புக் கமிட்டியின் பரிந்துரை அரசுக்கு வந்துள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் மீது எடுத்த நடவடிக்கை என்ன?